## எனது பிள்ளை பாடசாலைக்கு அனுமதி இல்லாமல் சமூகம் அளிக்கத் தவறினால் நான் என்ன செய்ய வேண்டும்?

**உங்கள் உடைய பிள்ளை பாடசாலைக்கு சமூகம் அளிக்கத் தவறினால் நீங்கள் அவசியம்:**

அவர்கள் உடன் கதைத்து ஏன் என்று அறிந்து கொள்ளவும்.

ஒரு பாடசாலை அங்கத்துவர் உடன் சந்தித்து நிலைமை தொடர்பாக கலந்து உரையாடி தீர்வுகளைத் தேடி ஆராய்ந்து பார்க்கவும்.

ஆலோசனைக்கும் வழி காட்டலுக்கும் பாடசாலையைத் தொடர்பு கொள்ளவும் - உங்கள் உடைய பிள்ளைக்கு என்ன நடை பெறுகின்றது என விளங்கிக் கொள்ள முயற்சிக்கவும். அத்துடன் அவர்கள் அந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண உதவி செய்யவும்.

**கல்வி அவர்கள் உடைய எதிர் கால வெற்றுக் கு ஒரு திறவு கோல் ஆகும். ஆகவே அது மிக முக்கியம் ஆனது ஆகும்.**

## எனக்கு ஏன் இந்தப் பிரசுரம் அனுப்பப் பட்டு உள்ளது?

இந்தப் பிரசுரம் ஆனது ஒவ்வொரு பெற்றோருக்கும் பராமரிப்பவருக்கும் அனுப்பப் பட்டு உள்ளது. ஆகவே ஒவ்வொரு ஆட்களுக்கும் தங்கள் பிள்ளைகள் தொடர்ந்து கிரமமாக சமூகம் அளிப்பதன் அவசியத்தையும் அதன் மூலம் அவர்கள் உடைய சிறந்த திறனை வெளிக் கொணர முடியும் என்பதை நன்கு அறிந்து கொள்வார்கள். பெற்றோர்களுக்கும் பாது காவலர்களுக்கும் தங்கள் உடைய கடமைகளையும் பொறுப்புகளையும் விளங்கிக் கொள்வதும் தங்கள் பிள்ளை உத்தியோக பூர்வமாக அனுமதிக்காமல் பாடசாலைக்கு சமூகம் அளிக்கத் தவறுவதன் விளைவுகளையும் அறிந்து கொள்வது மிக அவசியம்.

## எனது பிள்ளை பாடசாலைக்கு சமூகம் அளிக்கத் தவறினால் நான் என்ன செய்ய வேண்டும்?

பாடசாலைக்கு செல்லத் தவறிய காரணத்தை முதல் நாள் காலையில் பாடசாலைக்கு எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக தொடர்பு கொள்ளவும்.

வழமையான பல் வைத்தியர் & வைத்தியர் உடைய முன்னேற்பாட்டு சந்திப்புகளை பாடசாலை முடிந்த பின்பு அல்லது விடுதலை நாட்களில் மேற் கொள்ளவும். நீங்கள் உங்கள் உடைய பிள்ளைக்கான முன்னேற்பாட்டு சந்திப்பை பாடசாலை நேரத்தில் செய்ய வேண்டி இருப்பின் உங்கள் பிள்ளை பாடசாலையில் எவ்வளவு அதிக நேரம் இருக்க முடியுமோ அவ்வளவு நேரம் இருக்க விடுவது உடன் பாடசாலைக்கு உங்கள் பிள்ளை உடைய அந்த அப்பொயின்மன்ற் பற்றி அறிவிக்கவும்.

உங்கள் உடைய பிள்ளை வருத்தம் அல்லது பல் வைத்திய அல்லது மருத்துவ முன்னேற்பாட்டு சந்திப்பு காரணம் தொடர்பாக தொடர்ந்து பாடசாலைக்கு சமூகம் அளிக்காவிடில் மருத்துவ அறிக்கை அல்லது அப்பொயின்மன்ற் கடிதம் அல்லது அட்டையை கொண்டு வந்து காட்டும் படி கேட்டுக் கொள்ளப் படலாம்.

## எனது பிள்ளை பாடசாலைக்கு கிரமமாக சமூகம் அளிக்காவிடில் நான் ஏதாவது உதவி பெற்றுக் கொள்ள முடியுமா?

ஆம், உங்கள் உடைய பிள்ளை பாடசாலைக்கு சமூகம் அளிப்பது தொடர்பாக உங்களுக்கு உதவி தேவைப் பட்டால் உங்கள் உடைய பிள்ளையின் பாடசாலை உங்களுக்கு ஆலோசனையும் ஆதரவும் அளிக்கும். உங்கள் உடைய பிள்ளை பாடசாலைக்கு ஒழுங்காக சமூகம் அளிப்பது தொடர்பாக ஏதாவது கவலைகள், விசனங்கள் இருந்தால் நீங்கள் பாடசாலைக்கு உங்களுக்கு இயன்ற வரை மிக விரைவான சந்தர்ப்பத்தில் உங்கள் உடைய பிள்ளையின் பாடசாலை உடன் பேசுவது அவசியம்.

மேலதிக தகவலுக்கு, தயவு செய்து உங்கள் உடைய பிள்ளையின் பாடசாலையைத் தொடர்பு கொள்ளவும். அல்லது உங்களுக்கு ஏதாவது மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: courtattendanceofficer@harrow.gov.uk

# பாடசாலைக்கு சமூகம் அளித்தலும் கல்வி சார் தண்டப் பணம் தொடர்பான அறிவித்தல்கள்

## பெற்றோர்களும் மற்றும் பாது காவலர்களும் அவசியம் அறிந்து கொள்ள வேண்டியவை

Harrow COUNCIL
LONDON

## ஏன் ஒவ்வொரு நாளும் செல்ல வேண்டும்?

சிறந்த பாடசாலை சமுக அளிப்பு ஆனது உங்கள் பிள்ளைக்கு வெற்றி பெறுவதற்கான சந்தர்ப்பத்தையும் வாழ்க்கைத் தர திறன்களை அபிவிருத்தி செய்யவும் உதவும். உங்கள் உடைய பிள்ளை சுகவீனம் போன்ற ஏதாவது தவிர்க்க முடியாத காரணம் இருந்தால் ஒழிய ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு சமூகம் அளிக்க வேண்டும்.

பாடசாலைக்கு ஒழுங்காக சமூகம் அளிக்கத் தவறுவது உங்கள் உடைய பிள்ளையின் கல்வி கற்றலையும் அவர்கள் பெறும் தரத்தையும் பாதிக்கும். எங்களுக்குத் தெரியும் 10 இளைய ஆட்களில் ஒழுங்காக 17 நாட்கள் அல்லது அதற்கு மேலான நாட்கள் பாடசாலைக்கு செல்லத் தவறும் 6 பேர் சிறந்த தரத்தை GCSE இல் பெறுவது இல்லை. 10 இளைய ஆட்களில் 9 பேர் 8 நாட்களிலும் குறைவாக பாடசாலைக்கு செல்லத் தவறினால் சிறந்த தரத்தை GCSE இல் பெறுகிறார்கள். **தொடர்ந்து பாடசாலைக்கு செல்லத் தவறுவது** உங்கள் பிள்ளையின் வாழ்க்கையின் சந்தர்ப்பங்களை பாதிக்க கூடும். உதாரணமாக அவர்கள் பல்கலைக் கழகத்திற்கு செல்வதை அல்லது அவர்கள் விரும்பிய தரா தரத்தை பெற்றுக் கொள்ள அனுமதிக்கப் படுவதனைப் பாதிக்கலாம்.

பிள்ளைகள் பின் வரும் காரணங்களுக்காக ஒரு பொழுதும் பாடசாலைக்கு செல்வதை தவிர்க்க கூடாது. உதாரணமாக கடைக்குச் செல்தல், பிறந்த தினங்கள் அல்லது திருத்த வேலையாள் வருவதற்காக காத்து இருத்தல்
உங்கள் உடைய பிள்ளை பாடசாலைக்கு தொடர்ந்து ஒவ்வொரு நாளும் நேரத்திற்கு சமூகம் அளிப்பதை உறுதிப் படுத்திக் கொள்ளும் சட்ட பூர்வமான கடமை ஒன்று உங்களுக்கு உள்ளது.
உங்கள் உடைய பிள்ளையை பாடசாலைத் தவணை நேரத்தில் விடுதலைக்காக கூட்டிச் செல்வது அவர்கள் உடைய முன்னேற்றத்தில் பாதிப்பை தாக்கத்தை ஏற்படுத்த அநேக சாத்தியம் உண்டு. பாடசாலை ஒரு வருடத்தில் 38 கிழமைகள் திறந்து இருக்கும் அத்துடன் 14 கிழமைகளிற்கு குடும்பங்கள் விடுதலையில் செல்லலாம்.
பாடசாலையின் தலைமை ஆசிரியர் மிக விதி விலக்கான சந்தர்ப்பங்களில் மாத்திரம் பாடசாலை சமூகம் அளிக்காமைக்கு அங்கீகாரம் அளிக்க முடியும்.

## விளைவுகள்

உங்கள் உடைய பிள்ளை அங்கீகரிக்க முடியாத விடுதலையை எடுத்தால் அல்லது உங்கள் தலைமை ஆசிரியர் அங்கீகரித்ததை விட அதிக காலம் எடுத்தால் இந்த தவறுதல் ஆனது அங்கீகாரம் அளிக்கப் படாதது எனக் கருதப் பட்டு பதிவு செய்யப் படும். பின் வரும் தண்டனைகள் வழங்கப் படலாம்.:

உங்கள் பிள்ளை பாடசாலையில் தனது இடத்தை இழக்க நேரிடலாம். நீங்கள் ஒரு தண்டப் பணத்தை செலுத்த வேண்டி நேரிடலாம்.

உள்ளூர் அதிகார சபையினால் உங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படலாம். தண்டப் பணம் £2,500 வரை அறவிடப் பட வேண்டி நேரிடலாம்.

உங்கள் உடைய பிள்ளை தொடர்ந்து அங்கீகாரம் அளிக்கப் படாமல் சமூகம் அளிக்க தவறுவது அதாவது பாடசாலைத் தவணை நேரத்தில் விடுதலை எடுத்தல், தொடர்ந்து தாமதமாக பாடசாலைக்கு செல்லத் தவறுதல் அல்லது தொடர்ந்து வேறு ஏதாவது காரணத்திற்காக அத்தாட்சி அளிக்கப் பட்ட சுகவீனம் தவிர்த்து சமூகம் அளிக்கத் தவறுவது போன்ற காரணங்களுக்காக பாடசாலை ஆனது இலண்டன் பறோ ஒப் ஹறோவிற்கு ஒரு தண்டப் பண அறிவித்தல் அத்துடன் அல்லது நீதவான் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப் பட்டு ஒரு குற்றவியல் பதிவாக பதியப் பட்டு ஆக கூடுதலான தண்டப் பணமாக £2,500 அத்துடன் அல்லது 3 மாதங்கள் சிறைத் தண்டனை வழங்கப் படலாம்.
**தொடர்ந்து ஒழுங்காக மற்றும் நேரத்திற்கு சமூகம் அளிப்பது இரண்டும் ஒரு சட்ட பூர்வமான தேவைப் பாடு ஆகும். அத்துடன் இது உங்கள் பிள்ளையின் வாய்ப்புகளை கிடைக்கப் பெறுவதற்கான சாத்தியங்களை அதிகரிப்பதற்கும் மிக முக்கியம் ஆகும்.**

## ஏன் தண்டப் பணம் தொடர்பான அறிவித்தல்கள் வழங்கப் படுகின்றன?

ஒரு பிள்ளை பாடசாலைக்கு தொடர்ந்து கிரமமாக சமூகம் அளிக்கா விடில் அல்லது அவர்கள் சமூகம் அளிக்கத் தவறுவது பாடசாலையால் அங்கீகரிக்கப் படாவிடில் (உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப் படாதது) அதன் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் ஒரு குற்றத்தை புரிகின்றார்கள். சில சந்தர்ப்பங்களில் அங்கீகரிக்கப் படாத சமூகம் அளிக்க தவறுதல் ஆனது கல்வி சட்டம் 1996 (Education Act 1996) இன் பிரிவு 444 இன் கீழ் வழக்குத் தொடர்தலை தூண்டுவிக்கலாம். சமூக விரோத நடத்தைக்கு எதிரான சட்டம் 2003 (Anti Social Behaviour Act 2003) ஆனது வழக்குத் தொடர்தலுக்கு பதிலாக தண்டப் பண அறிவித்தலை அறிமுகப் படுத்தி உள்ளது. காலக் கெடுவிற்கு முன்பாக ஒரு தண்டப் பண அறிவித்தல் செலுத்தப் பட்டால் அதற்காக ஒரு நீதி மன்றத்திற்கு சமூகம் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனாலும் இன்னமும் பாடசாலைக்கு சமூகம் அளித்தலை முன்னேற்ற இலக்காக கொண்டு இருக்க வேண்டும்.

## ஒரு தண்டப் பண அறிவித்தல் எவ்வளவு?

21 நாட்களுக்குள் செலுத்தப் பட்டால் £60 ஆகும். 21 நாட்களுக்குப் பின்னர் ஆனால் 28 நாட்களுக்கு முன்பாக செலுத்தப் பட்டால் £120.

## எப் பொழுது அது பாவிக்கப் படும்?

உத்தியோக பூர்வமாக அதிகாரம் அளிக்கப் படாத பாடசாலை சமூக அளிப்புத் தவறுகள் பதிவு செய்யப் பட்டு இருந்தால் மாத்திரமே ஒரு தண்டப் பண அறிவித்தல் வழங்கப் படும்.

## எனக்கு ஒரு தண்டப் பணம் தொடர்பான அறிவித்தல் கிடைக்கப் பெற்று நான் பணம் செலுத்தாவிடில் என்ன நடை பெறும்?

ஒரு தண்டப் பண அறிவித்தல் கிடைத்ததில் இருந்து அதனை முழுமையாக செலுத்துவதற்கு உங்களுக்கு 28 நாட்கள் வரை உள்ளன. இந்த பணம் செலுத்தப் படாவிடில் உள்ளூர் அதிகார சபை ஆனது இந்தச் சட்டத்தின் கீழ் நீதவான் நீதி மன்றத்தில் அங்கீகரிக்கப் படாத உங்கள் பிள்ளை பாடசாலைக்கு சமூகம் அளிக்கத் தவறியமைக்காக அந்த ஆரம்ப குற்றத்திற்காக
உங்களுக்கு எதிராக நீதவான் நீதி மன்றத்தில் வழக்குத் தொடராலாம்.

நிரூபிக்கப் பட்டால் இதற்காக £2,500 வரை மற்றும் அத்துடன் அல்லது பல வேறு வகையான கட்டளைகள் உதாரணமாக பெற்றோர் தகைமை தொடர்பான கட்டளைகள், சமூக சேவை தண்டனைகள் மற்றும் சிறைத் தண்டனை போன்றன வழங்கப் படலாம். ஒரு பெற்றார் அவர்களது பிள்ளை ஒழுங்காக பாடசாலைக்கு சமூகம் அளிப்பதை தவறும் அதனை மேலும் அதிகரிக்கச் செய்யும் வகையில் குற்றம் புரிந்தவராக கண்டு பிடிக்கப் பட்டால் பெற்றோருக்கு எதிராக ஒரு குற்றவியல் பதிவு ஒன்று பதிவு செய்யப் படும்.

## நான் தண்டப் பண அறித்தலின் பிரகாரம் பணத்தை செலுத்திய பின்பும் எனது பிள்ளை பாட சாலைக்கு செல்லத் தவறினால் எனக்கு எதிராக வழக்கு தொடர முடியுமா?

தண்டப் பண அறிவித்தலில் குறிப்பிடப் பட்டு உள்ள அதில் உள் அடக்கப் பட்டு உள்ள காலத்திற்கு நீங்கள் பணம் செலுத்தியதால் உங்கள் பொறுப்பு அதில் இருந்து நீக்கப் படும். எவ்வாறு இருப்பினும் மேலும் அங்கீகரிக்கப் படாத சமூகம் அளிக்கத் தவறியமைக்காக தண்டப் பண அறிவித்தலில் குறிப்பிடப் படாத காலப் பகுதிக்கு சூழ் நிலைகளைப் பொறுத்து உங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப் பலாம். இது தான் நிலைமை எனில் நீங்கள் உங்கள் பிள்ளையின் பாடசாலை உடனும் மற்றும் ஆதரவு முகைமைகளான விரைவான தலையீடு சேவை (Early Intervention Service) (EIS) ஆகியவற்றுடன் நெருக்கமாக நீங்கள் பணி புரிவது அவசியம்.